# இறைவன் நரக நெருப்பால் ஏன் தண்டிக்க வேண்டும்?

உதாரணத்திற்கு யாராவது ஒருவர் தங்கள் பெற்றோரை புறக்கணித்து, அவமானப்படுத்தி, வீட்டை விட்டு வெளியேற்றி, அவர்களை பாதையில் விட்டுவிட்டால் அந்த நபர் குறித்து எப்படி நினைப்போம்?

ஒரு நபர் இந்த நிகழ்வைத் தொடர்ந்து தான் அந்த நபரின் வீட்டிற்கு சென்று, அவனை கௌரவித்து, உணவு வழங்கி, அவரின் செயலுக்கு நன்றி பாராட்டுவதாக யாராவது கூறினால், மக்கள் அந்த நபரின் செயலை பாராட்டி அதனை ஏற்றுக்கொள்வார்களா?! அல்லாஹ்வுக்கே இதில் உயர் முன்மாதிரி உண்டு. படைப்பாளனை நிராகரித்து, அவனை நம்பாத ஒருவரின் இறுதி முடிவு என்னவாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்? நரக நெருப்பால் தண்டிக்கப்படுவோர் அவர்களுக்கே உரிய சரியான தண்டனையையே பெறுகிறார்கள். காரணம் குறித்த அந்நபர் பூமியில் அமைதியும், நன்மையும் விளைய வேண்டும் என்பதை விரும்பாது அதனை அற்பமாகக் கருதினார். ஆகவே பரலோகத்து சுவர்க்க இன்பத்தை பெறுவதற்கு தகுதியற்றவராக மாறி விடுகிறார்.

உதாரணமாக, இரசாயன ஆயுதங்களால் குழந்தைகளை சித்திரவதை செய்யும் ஒருவர் எவ்வித விசாரணையுமின்றி சுவர்க்கம் நுழைய வேண்டும் என நாம் எதிர்பார்ப்போமா?

அவர்களின் குற்றம் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. மாறாக அது ஒரு நிலையான பண்பாகும்.

"(ஒரு வேளை) அவர்கள் திரும்பவும் அனுப்பப்பட்டாலும், அவர்கள் எதைவிட்டு தடுக்கப்பட்டிருந்தார்களோ, அதற்கே அவர்கள் மீண்டு விடுவார்கள். நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே". (அல்அன்ஆம்: 28). تقدم

இவ்வாறானோர் மறுமைநாளில் கூட இறைவனுக்கு முன் பொய் சத்தியம் செய்வதன் மூலமே அல்லாஹ்வை எதிர்கொள்வார்கள்.

"அவர்களை அல்லாஹ் ஒன்றாக எழுப்பும் நாளில், உங்களிடம் அவர்கள் சத்தியம் செய்வது போன்று அவனிடமும் சத்தியம் செய்வார்கள். அவர்கள் (தமக்குப் பயனளிக்கும்) ஏதோ ஒன்றின் மீது தாம் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள்தாம் பொய்யர்கள்". (அல் முஜாதலா :18). تقدم

உள்ளத்தில் பொறாமையும் ரோசமும் கொண்ட சில மனிதர்களிடமிருந்து தீமை வரமுடியும். இவ்வாறானோர் மனிதர்களுக்கு மத்தியில் பிரச்சினைகளையும் மோதல்களையும் ஏற்படுத்த

காரணமாயிருப்பர். ஆகையால் அவர்களுக்குரிய வெகுமதியாக நரக நெருப்பு இருப்பது நியாயமாகும். இதுவே அவர்களின் இயல்பிற்கு பொருந்துவதாக உள்ளது.

"எவர்கள் நமது வசனங்களைப் பொய்ப்பித்து அவற்றை விட்டும் பெருமையடிக்கிறார்களோ, அவர்கள் நரகவாசிகள் அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள்". (அல் அஃராப் : 36). تقدم

நீதியாளன் என்ற அல்லாஹ்வின் பண்பைப் பொறுத்தவரை அவனின் அருள் மற்றும் கருணையுடன் சேர்த்து அவன் தண்டிப்பவனாகவும் உள்ளான் என்பதை காட்டுகிறது. கிறிஸ்துவத்தில் அல்லாஹ்வை அன்பிற்கும், யூதமதத்தில் அல்லாஹ்வை கோபம் என்ற பண்புகளுக்குரியவனாகவே சித்தரிக்கின்றனர். இஸ்லாத்தில் அல்லாஹ் என்பவன் நீதியும் கருணையும் நிறைந்த இறைவன், அவனுக்கு உயரிய திருநாமங்கள் அனைத்தும் உண்டு. அவை அழகு மற்றும் மகத்துவம் போன்ற பண்புகளை உள்ளடக்கியுள்ளது.

அத்துடன்; நாம் எமது நடைமுறை வாழ்க்கையில், தங்கம் மற்றும் வெள்ளி போன்ற தூய்மையான பொருட்களில் உள்ள அசுத்தங்களை வேறுபடுத்த நெருப்பைப் பயன்படுத்துகிறோம். எனவே சர்வ வல்லமைமிக்க அல்லாஹ் - இதில் உயர் முன்மாதிரி அவனுக்குரியது- மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையில் தனது அடியார்களை பாவங்கள் மற்றும் தவறான செயல்களிலிருந்து தூய்மைப்படுத்த நரக நெருப்பைப் பயன் படுத்துகிறான். இறுதியில் யாருடைய உள்ளத்தில்; அணுவளவு இறைவிசுவாசம் இருக்கிறதோ அவர் நரக நெருப்பிலிருந்து அவனின் கருணையினால் வெளியேற்றிவிடுவான்.

---

இஸ்லாம் குறித்த கேள்வி பதில்

Source: https://e-quran.com/qa/ta/show/120/

Arabic Source: https://e-quran.com/qa/ar/show/120/

Tuesday 15th of September 2026 01:06:23 PM

النجاة الخيرية
ALNAJAT CHARITY

الدعوة الإلكترونية
@EDCkwt